DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 188/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முருகேசன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.சுப்ரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A3 present.A2 absent. u/s 355 BNSS petition filed and allowed)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சி.கே மங்கலத்தில் வசித்து வருகிறேன்.விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குதெரியும் நான் பார்த்துள்ளேன். மற்றொரு எதிரி ரகுவையும் நான் பார்த்துள்ளேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. நான்எனது வீட்டில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது பாண்டுகுடியில் மஞ்சுவிரட்டு நடப்பதாக கேள்விபட்டு அதை பார்ப்பதற்காக அங்குசென்றேன். பாண்டுகுடி கண்மாய்கரை அருகே மஞ்சுவிரட்டை காண்பதற்காக

உட்கார்ந்திருந்தேன். அப்போது மதியம் சுமார் 2.00 மணியளவில் ஆஜர் எதிாகள் இருவரும் மற்றும் எதிரி ரகுவும் அங்கு வந்து என்னை கன்னத்தில் அறைந்து கீழேதள்ளி அடித்து மிதித்து அருகில் கிடந்த பீர்பாட்டிலை எடுத்து எனது நடு மண்டையில் அடித்தார்கள். என்னிடம் இருந்த ரூபாய் 35,000/— பணத்தையும் எதிரிகள் எடுத்துசென்றுவிட்டார்கள். உடனே நான் சற்று கதிகலங்கி இருந்தேன். லேசாக சுயம் திரும்பியதும் எனது போனில் இருந்து 108 ஆம்புலன்சுக்கு போன்செய்தேன். சற்று நேரத்தில் ஆம்புலன்ஸ் சம்பவயிடத்திற்கு வந்து விட்டது. என்னை துாக்கி கொண்டு திருவாடானை அரசு மருத்துவமனைக்கு சேர்த்தார்கள்.

2. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தலையில் கட்டுபோட்டுவிட்டு அன்றையதினம் மாலையே தொண்டி காவல்நிலையம் சென்று நடந்ததை தெரிவித்து புகார் மனுஅளித்தேன். புகாரை நான் தகவல் தெரிவிக்க எனக்கு தெரிந்த ஒரு நபர் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.அந்த கையெழுத்து அ.சா.,ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1.புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. புகாரை நான் படித்துபார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரிகள் எனிடமிருந்து ரூபாய் 35,000 த்தை எடுத்து சென்றதாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகாரை நான் எந்த தேதியில் காவல்நிலையத்தில் கொடுத்து கையொப்பம் இட்டதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 09.08.2023 தேதி. அன்றையதினம் தான் காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரிகள் என்னிடமிருந்து பணம் எடுத்துசென்ற விவரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். பணம் எடுத்துசென்ற விவரத்தை போலிசார் வாக்குமூலத்தில் பதிவு செய்தார்களா என்றால் இல்லை.

2.புகாரில் எனது தம்பிக்கும் எங்கள் ஊரை சார்ந்த கோபாலுக்கும் முன்விரோதம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல நான் அவ்வாறு எதுவும் தெரிவிக்கவில்லை. புகாரில் சம்பவ தேதியை 02.08.2023 என குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். சம்பவயிடத்தில் எனக்கு தெரிந்த கருப்பையா என்ற நபர் இருந்தார். அவர் தற்போது உயிரோடு இல்லை. போலிசார் விசாரணையில் சம்பவயிடத்தில் கருப்யைா இருந்த விவரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் உள்ளது என்றும் நாங்கள் பேசி கொள்வதில்லை என்றால் சரியல்ல. முன் விரோதம் உள்ளது என்றும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பாக நாங்கள் எதிரிகளை தாக்கி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நாங்கள் காவல்நிலையத்தில் வைத்து சமரசமாக சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல.

3.சம்பவயிடத்தில் போலிசார் யாரும் இல்லை. சம்பவயிடத்தில் பொதுமக்கள் நியை பேர் இருந்தார்கள். யாரும் சண்டையை விலக்கிவிடவில்லை. சம்பவத்தன்று மதியம் 3 மணியளவில் மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். 3 மணிக்கு மருத்துவனையில் வைத்து எனக்கு மருத்துவ செவிலியர் சேர்ந்து சிகிச்சை அளித்தார்கள். நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று சென்றுவிட்டேனா என்றால் இல்லை சுமார் 5 நாட்கள் சிகிச்சை பெற்றேன். எந்த தேதியில் சிகிச்சை முடிந்துவெளியேறினேன் என்று நினைவில் இல்லை. தேவகோட்டை மருத்துவர் பூமிநாதனிடமும் சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை மருத்துவமைனையில் வைத்து என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை.

4.மருத்துவரிடம் எதிரிகள் தாக்கியதால் தான் காயம் ஏறப்ட்டது என்று தெரிவித்தேன். காயத்திற்கு மருத்துவமனையில் எக்ஸ்ரே, ஸ்கேன் எடுக்கப்பட்டது.திருவடானை அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை பெற்றதாகவும் எக்ஸ்ரே, ஸ்கேன் எடுக்கப்பட்ட விவரத்தையும் அதன்பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரத்தையும் போலிசாரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் எனக்கு வேறு விதமாக தலையில் ஏறப்ட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது ஏற்கனவே கொண்டுள்ள முன் பகையை வைத்துகொண்டு பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு பின்னிட்டு யோசித்து காலதாமதாதக எதிரிகள் மீது பொய் புகார் கொடுததுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுதத புகாருக்கு ஆதரவாக முன்னுக்கு

பின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.